O.S. No.49/2021

18.06.2025

**பி.சா.1**

**திரு அறிவழகன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

சோமையன் மகன் பட்டாணி, மாரிமுத்து மகன் வீரமணி ஆகியோர் எங்கள் கிராமத்தை சேர்ந்தவர்களா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி இருவரும் எங்கள் ஊர் மற்றும் எங்கள் சமூகத்தை சேர்ந்தவர்கள் அவர்களை நன்றாக தெரியும் அவர்களை தெரியும் என்றால் இவ்வழக்கில் எனக்கு பாதிப்பு ஏற்படும் என்பதற்காக நான் தெரியாது என சொல்கிறேன் என்றால் தவறு. நான் எடமேலையூர் மேற்கு பஞ்சாயத்தை சேர்ந்தவர். வாதி எடமேலையூர் நடுத்தெரு பஞ்சாயத்தை சேர்ந்தவர், அவர் எங்கள் சமூகத்தை சேர்ந்தவர். நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்தில் நடத்துனராக பணிபுரிந்து 31.05.2025 அன்று பணி ஓய்வு பெற்று விட்டேன். நான் ரூ.15,00,000/-மும் வட்டியும் சேர்த்து கொடுக்க வேண்டும் என்றுதான் இந்த நீதிமன்றத்தில் வாதி வழக்கு தொடர்ந்துள்ளார் என்ற விபரம்

எனக்கு தெரியும். வா.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 2018ல் பாண்டியன் என்பவரிடமிருந்து ஒரு ஏக்கர் நிலம் வாங்கினேனா என்றால் இல்லை. வாதியிடமிருந்து ரூ.15,00,000/- பணம் வாங்கி 2018ல் ஒரு ஏக்கர் நிலம் வாங்குவதற்காகவும் குடும்ப செலவிற்காகவும் கடன் பெற்றேன் என்றால் தவறு. 23.07.2018ல் நிலம் வாங்குவதற்காகவும் குடும்பத்தை விஸ்தரிக்கவும் வாதியிடமிருந்து 12% வட்டி வீதத்தில் வட்டி தருவதாக கூறி உரிய சாட்சிகளின் முன்னிலையில் ரூ.15,00,000/- அசல் கடன் பெற்றது உண்மையென்றும் தற்போது வழக்கிற்காக அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் எனவும் சொன்னால் தவறு. வாதி ஏல சீட்டு நடத்தியதாகவும் அந்த ஏல சீட்டில் நான் சேர்ந்து ஒரு இலட்சம், 5 இலட்சம் சீட்டில் சேர்ந்து பணம் எடுத்து அதை வாதியிடம் திரும்ப செலுத்தினேன் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அசல் கடன் ரூ.15,00,000/- பெற்று அசலையும் அதற்கான வட்டியையும் திரும்ப செலுத்தாமல் வாதி சட்ட விரோதமாக ஏல சீட்டு நடத்தினார் என சொல்வது உண்மைக்கு மாறானது என்றால் தவறு. வாதி சட்டத்திற்கு புறம்பாக ஏல சீட்டு நடத்தினார் என்பது தொடர்பாக காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. வாதி என் மீது

காவல் நிலையத்தில் நான் பணம் கொடுக்கவில்லை என்று புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். நான் பணம் கொடுக்க வேண்டியதில்லை என்று காவல் நிலையத்தில் எழுதி கொடுத்து விட்டு வந்து விட்டேன். வாதி, பிரதிவாதியிடம் கொடுத்த கடனை திரும்ப கேட்டபோது கட்டையால் தாக்க வந்ததாக வாதி வடுவூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். அந்த புகாரின் பெயரில் 29.06.2021ல் ஆஜராகி சம்பவம் பொய் என்றும் நான் வாதியிடம் வாங்கியிருந்த ஏல சீட்டு பணத்தை திரும்ப கொடுத்து விட்டதாக எழுதி கொடுத்து விட்டு வந்தேன். வாதி வடுவூர் காவல் நிலையத்தில் பொய்யான புகார் கொடுத்திருந்தார் அவர் கொடுக்க வேண்டிய பணமெல்லாம் கொடுத்து விட்டேன் என்று காவல் நிலையத்தில் எழுதி கொடுத்துவிட்டு வந்து விட்டேன். அவ்வாறு நான் காவல் நிலையத்தில் எழுதி கொடுத்த ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக எனது நிரூபண வாக்குமூலத்தில் தாக்கல் செய்துள்ள சூழ்நிலையில் நான் வாதிக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுத்து விட்டதாகவும் வாதி என்மீது பொய்யாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது தவறு என்றும் கூறி வாதிக்கு ஏதேனும் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. என்னுடைய எதிர் வழக்குரையில் வாதிக்கு கொடுக்கப்பட்ட வங்கி பரிவர்த்தனையை நீதிமன்றத்தில் விசாரணை காலத்தில்

தாக்கல் செய்கிறேன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ஆனால், அதற்கான ஆவணங்களை நான் விசாரணை காலத்தில் தாக்கல் செய்யவில்லை. வங்கி பரிவர்த்தனை விபரத்தை தாக்கல் செய்தால் உண்மை நிலவரம் தெரிந்து விடும் என்பதால் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு அனுப்பப்பட்டதை Refused என்ற குறிப்புடன் தபால் துறையினர் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு திருப்பி அனுப்பியுள்ளார்கள் என்றால் எனக்கு யாரும் அனுப்பவுமில்லை நான் திரும்ப அனுப்பவுமில்லை. வாதிதான் தொகை கேட்டு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்ற விபரம் தெரிந்து எடமேலையூர் கிராமம் வடக்கு மேல தெருவில் நான் தங்கியிருந்தபோது அந்த அறிவிப்பை பெறாமல் வேண்டுமென்றே வா.சா.ஆ.2 யை நான் Refused என வாங்க மறுத்து திரும்ப அனுப்பிவிட்டேன் என்றால் அது உண்மையல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு வந்த காலத்தில் நான் மன்னார்குடி-வடசேரி ரோட்டில் வாடகைக்கு குடியிருந்தேன் என்ற விபரத்தை நிரூபிக்கும் விதமாக ஏதேனும் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதியிடம் ஏல சீட்டு எடுத்து பணம் திருப்பி செலுத்தியதாக நான் நிரூபண வாக்குமூலத்தில்

சொல்லியுள்ளதற்கு எவ்விதமான வாதியின் ஒப்புதல் ரசீதும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அவர் கையொப்பம் பெறுவார், அவர் ரசீது கொடுக்கமாட்டார். வாதி எந்த காலத்திலும் ஏல சீட்டு நடத்தவில்லை எனவும் நான் ஏல சீட்டில் சேரவில்லை எனவும் எனக்கும் வாதிக்கும் ஏல சீட்டு பரிமாற்றம் எதுவுமில்லை எனவும் வழக்கில் கட்சி சொல்லியிருப்பது உண்மைக்கு மாறானது என்றால் அது உண்மையல்ல என்று நான் மறுக்கிறேன். வழக்குபடி வாதிக்கு அசல் ரூ.15,00,000/-மும் அதற்குண்டான 12% வட்டி தொகையும் சேர்த்து நான் வாதிக்கு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் நான் பணமே வாங்கவில்லை. வாதிக்கு அசல் மற்றும் வட்டி செலுத்தி வைப்பதோடு வாதிக்கு ஏற்பட்ட வழக்கு செலவையும் நான் சட்ட கடப்பாடு உடையவன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.06.18 16:16:58 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.